முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற நாளினை

# எல்லாத் தலைமுறையும் சேர்ந்து உருவாக்குவோம்!

# கலைஞர், சமரசம் இல்லாத ஒரு மாபெரும் போராளி!

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.

முன்னின்று நடத்திய 'கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்' – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரை!

சென்னை, ஜூன் 8

**"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற நாளை, எல்லாத் தலைமுறையும் சேர்ந்து உருவாக்குவோம்" என்றும் – "கலைஞர் சமரசம் இல்லாத ஒரு மாபெரும் போராளி" என்றும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய, "திராவிடத்தால் உயர்ந்த ஆகாயம்! திராவிட இனத்தின் பூபாளம்!" எனும் தலைப்பிலான 'முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் புகழரங்கில்' உரையாற்றுகையில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. குறிப்பிட்டார்.**

மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலில் – பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

தலைவர் கலைஞருடைய பிறந்த நாளை நாம் கொண்டாடுகிறோம். எனக்கு முன்னால் உரையாற்றிய தம்பி தமிழன் பிரசன்னா அவர்கள், கலைஞர் கோலோச்சிய கோட்டையில், எப்படிப்பட்டவர்கள் எல்லாம் கோலோச்சுகிறார்கள் என்று, "நாங்கள் சொல்லவில்லை, ஜூனியர் விகடன் சொல்கிறது" என்று தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

வழக்கறிஞர் சகோதரி அருள்மொழி அவர்கள், "தோலுரித்துக் காட்டினால் மட்டும் போதாது; இப்படிப்பட்ட நேர்வுகள் எல்லாம் அரசியலில் வரும். அதிலிருந்து பெரியார் வழியில், அண்ணா வழியில், கலைஞர் வழியில் எப்படி நாம் வெளியே வருவது? இந்த மக்களை மீண்டும் எப்படி ஆட்கொள்வது? அடுத்த தலைமுறைக்காக எப்படி நாம் சிந்திப்பது?" என்பதை ஒரு கேள்வியாக உங்களிடத்திலே வைத்து, அதற்கு விடையும் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

நான் உங்களிடத்திலே அவர்கள் உரைக்குப் பிறகு மிகச் சுருக்கமாக உரையாற்ற விரும்புகிறேன். அருள்மொழிக்கு இருக்கிற சங்கடம், வருத்தம் எனக்குத் தெரியும். தமிழன் பிரசன்னாவுக்கு இருக்கிற கோபம், ஆவேசம் எனக்குப் புரிகிறது.

நீங்கள் எல்லாம் பரவாயில்லை, தமிழ்நாட்டில் இதையெல்லாம் சகித்துக் கொண்டு, இதையெல்லாம் எதிர்கொண்டு, அவர்களுக்கு வெவ்வேறு பெயர்களை எல்லாம் வைத்துக்கொண்டு, அது வாயில் வருமோ, நோயில் வருமோ எனக்குத் தெரியாது; எல்லாப் பெயர்களையும் வைத்துக் கொண்டு நீங்கள் இருந்துவிடுகிறீர்கள்.

எங்களுக்கு என்ன பிரச்சினை தெரியுமா? மனந்திறந்து சொல்ல வேண்டுமென்றால், நாடாளுமன்றத்தில் இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் எங்களைப் பார்த்தால் என்ன சொல்வார்கள் என்றால், "இவர்களுக்கு மட்டும் எப்படி முடிகிறது? இந்த வீரம், இந்தச் செறிவு, இந்த ஆழமான பார்வை, மதவாதத்திற்கும் – சாதிய வாதத்திற்கும் ஆட்படாத அறிவுமிக்கவர்களாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இருக்கிறார்களே!" என்பது மட்டுமல்ல...

### அகிலேஷ் யாதவ் கேட்ட கேள்வியும், ஸ்டாலின் பெற்றுத்தந்த சமூக நீதியும்

ஒரு நாள் நாடாளுமன்றத்தினுடைய உணவு விடுதியிலே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அகிலேஷ் யாதவ் வந்து எங்களுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "எப்படி இதெல்லாம் உங்கள் தலைவரால் முடிகிறது, உங்கள் கட்சியால் முடிகிறது?" என்று கேட்டார். "என்ன?" என்று கேட்டோம்.

மோடி அவர்கள் 'நீட்' (NEET) கொண்டு வந்ததற்குப் பிறகு, ஓர் ஆண்டுக்கு 5,500 இடங்கள், அரசுக் கல்லூரி, தனியார் கல்லூரி என இந்தியாவில் முழுவதும் இருக்கிற கல்லூரிகளில், 15 சதவீத இடங்களை நீட் அடிப்படையில், ஒன்றிய அரசினுடைய தொகுப்பாக நாங்கள் கொண்டு வந்து போடுவோம் என்றார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாக் கல்லூரிகளிலும் – ஸ்டான்லியாக இருந்தாலும், எம்.எம்.சி.யாக இருந்தாலும், ஜே.பி. ஆராக இருந்தாலும், எஸ்.ஆர்.எம்.மாக இருந்தாலும், தனியார் கல்லூரிகள் எதுவாக இருந்தாலும், 15 சதவீத இடத்தை ஒன்றிய அரசாங்கம் நிரப்பும். அப்பொழுது இந்தியாவில் இருக்கிற மொத்தக் கல்லூரிகளில் ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ 5,500 பேர் படிக்க வேண்டும். யார்? இங்கே ராஜஸ்தான்காரர் படிப்பார், குஜராத்துக்காரர் படிப்பார். அதே மாதிரி, தமிழ்நாட்டுக்காரர் அங்கே படிப்பார். தமிழ்நாட்டுக்காரர் குஜராத்துக்குப் போவார், இல்லை என்று சொல்லவில்லை. "தேச ஒற்றுமைக்காக நாங்கள் வைக்கிறோம், ஒரே மாதிரி கல்வி வேண்டும் என்பதற்காக வைக்கிறோம்" என்று 15 சதவீத இட ஒதுக்கீட்டை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். எடுத்துக் கொள்ளட்டும், தப்பில்லை.

ஆனால், எங்கே பிரச்சினை வருகிறது என்றால், அந்த 15 சதவீத இடஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடம் உண்டா? தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் உண்டா? 5,500 இடங்கள், அதற்கு இடஒதுக்கீடு (Reservation) இல்லை. எங்களுக்கு யாருக்கும் தெரியவில்லை!

**"உத்தரப் பிரதேசத்தில் நான் இருக்கிறேன்; பீகாரில் தேஜஸ்வி இருக்கிறார்; காஷ்மீரில் ஃபரூக் இருக்கிறார்; ஆம் ஆத்மி டெல்லியிலே இருக்கிறது; ஆனால், எந்த முதலமைச்சருக்கும், எந்த அரசியல் கட்சித் தலைவருக்கும் 15 சதவீதத்தில் இடஒதுக்கீடு இல்லையே! பிற்படுத்தப்பட்டவன் இந்த ஊரில் முதலியார், கவுண்டர், நாயுடு, செட்டியார், வன்னியார், முக்குலத்தோர், அது மாதிரி அங்கே இருக்கிற ஜாதி. இவர்களுக்கெல்லாம் இடமில்லையே!" என்று நாங்கள் தவித்த நேரத்தில், தெரியாத நேரத்தில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற ஒற்றை மனிதன் உச்ச நீதிமன்றத்தினுடைய கதவுகளைத் தட்டி, சமூக நீதியை நிலைநாட்டி, "அதிலேயும் எங்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும்" என்று தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல, ராஜஸ்தானில், குஜராத்தில், பீகாரில், உத்தரப் பிரதேசத்தில் இருக்கிற பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வாங்கித் தந்த தலைவனும் இயக்கமும் திராவிட முன்னேற்றக் கழகம்!**

### தொகுதி மறுசீரமைப்புச் சூழ்ச்சியும், நாடாளுமன்றப் போரும்

அமித்ஷாவினுடைய, மோடியினுடைய கோரப் புத்தி என்ன செய்தது? தென்னாடு முழுக்க பிஜேபி பரவ முடியவில்லை. திராவிடத்தில் காலூன்ற முடியவில்லை. அங்கொன்றும் இங்குமாகச் சில நேரங்கள் ஹைதராபாத் வரைக்கும் போகிறோம். ஆனால் வடபுலத்திலே மக்கள் தொகை கணக்கெடுப்பில், நாமெல்லாம் '80-ல் "இரண்டே இரண்டு குழந்தைகள்" என்று சொன்னோம். "நாம் இருவர், நமக்கு இருவர்" நாங்கள் படிக்கும்போது. இப்பொழுது என் மகள் பள்ளிக்குச் போகும்போது, "நாம் இருவர், நமக்கு ஏன் மற்றொருவர்?" என்று குறைத்துவிட்டார்கள். நாமெல்லாம் சரியாகக் குறைத்துக் குறைத்துக் குறைத்து, இப்பொழுது எனக்கு ஒரே ஒரு மகள்தான்.

ஆனால், எங்கள் அப்பா அம்மாவுக்கு நான் எட்டாவது பிள்ளை. எட்டாவது பிள்ளையாகப் பிறந்த ஒருவனுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை. ஆஸ்திக்கு ஆண் பிள்ளை, என் பெண் பிள்ளை ஆஸ்தி வைத்துக்கொள்ளக் கூடாதா? விட்டுவிட்டேன் அதோடு. ஆனால் வடநாட்டில் இன்னும் 8 பிள்ளைகள், 10 பிள்ளைகள், 12 பிள்ளைகள்.

அவர் என்ன செய்கிறார்? "மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகளை நாங்கள் மாற்றுவோம்" என்கிறார். தமிழ்நாட்டுக்கு 40 (புதுச்சேரி 1 சேர்த்து) இருக்கிறது, அது 47 ஆகும். ஆனால் உத்தரப் பிரதேசத்தில் 80 இருக்கிறது, அது 140-க்குப் போகும். இப்படி ஏறிப் போனால், எந்தச் சட்டத்தையும் – அது நீட்டாக இருந்தாலும், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா இல்லாமல் தானாகவே அவர்கள் சட்டமேற்றக்கூடிய வலிமையைப் பெற்று விடுவார்கள் என்பதற்காக அதைக் கொண்டு வந்தார்கள். யாருக்கும் புரியவில்லை.

அகிலேஷ் யாதவ் என்ன சொல்கிறார்? "எங்களுக்கு நல்லதுதானே, 80 என்பது 140 ஆகிறது எங்களுக்கு என்ன பிரச்சினை? அதனால் தமிழ்நாட்டுக்குத்தான் பாதிப்பு, நாங்கள் ஏன் சத்தம் போட வேண்டும்?". ஆனால் தலைவர் கடிதம் எழுதினார், நாங்கள் பேசினோம்: "ஐயா, உங்களுக்கு 80 என்பது 140 ஆகிறது என்று சந்தோஷப்படாதீர்கள். அவர்களுடைய நோக்கம் ஒவ்வொரு மாநிலமாக மாநிலக் கட்சிகளை ஒழித்துக் கொண்டே வருவது, எண்ணிக்கையைக் கூட்டுவது; கூட்டணி சேருமாம்; அந்தக் கட்சி காலி. அ.தி.மு.க. சேர்ந்ததா – அது காலி, ஆப் (AAP) இருந்ததா – அது காலி."

இப்படி ஒவ்வொரு மாநிலமாகப் பிராந்தியக் கட்சிகளை, மாநிலக் கட்சிகளை ஒழித்துவிட்டு, நாடாளுமன்றத் தொகுதிகளுடைய எண்ணிக்கையைக் கூட்டி, "இதை இந்து ராஷ்டிரம், நாங்கள்தான் ஆளுவோம்" என்று சொல்லுவதற்கான சூழ்ச்சி உள்ளே இருக்கிறது என்று சொன்னவுடன், சொன்னால் நம்ப மாட்டீர்கள், "தி.மு.க. தவிர நமக்கு வேறு யாரும் பிரச்சினை இல்லை" என்று அந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார்கள்.

தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்... கெஞ்சினார், கை எடுத்துக் கும்பிட்டார். "ஒரு மணி நேரம் கொடுங்கள், நான் மாற்றிக் கொடுத்துவிடுகிறேன். அகிலேஷ் யாதவ், நீங்கள் ஏன் ஸ்டாலினோடு சேர்ந்து வம்பு இழுக்கிறீர்கள்?" என்று நேரடியாக கேட்டார். நேரலையில் (Live) போகிறது. அப்படிப்பட்ட அகிலேஷ் யாதவை, வடபுலத்துக்காரர்களை, "இந்தத் தீங்கு உங்களுக்கும் எங்களுக்கும் மட்டுமல்ல,



எதிர்காலத் தீங்கு இந்தியாவிற்கு" என்று சொல்லி, அதை முதன்முதலாக நாடாளுமன்றத்தில் அமித்ஷாவும் – மோடியும் உட்கார்ந்திருக்கும் போதே தோற்கடித்த இயக்கம் இந்த இயக்கம்! இவ்வளவு பெரிய வலிமையுள்ள ஒரு இயக்கம்.

### இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பண்புகளைக் காத்த தி.மு.க.

நான் இன்னும் சொல்லட்டுமா? நான் தான் அடிக்கடி சொல்லுவேன். இந்தியாவினுடைய அரசியல் சட்டம் என்ன சொல்லுகிறது? சுருக்கமாகச் சொன்னோம் என்றால், "WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC". இந்தியாவை நாங்கள் எப்படி வடிவமைத்திருக்கிறோம்? இது ஒரு இறையாண்மை உள்ள நாடு; இறையாண்மை உள்ள குடியரசு நாடு; இது ஒரு ஜனநாயக நாடு; இது ஒரு மதச் சார்பற்ற நாடு; இது ஒரு சமதர்ம நாடு. இந்த நாடுதான் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை.

அரசியல் சட்டத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் திருத்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. ஆனால், அரசியல் சட்டத்தினுடைய அடிப்படைப் பண்புகளை – இந்த நான்கையும் மாற்றவே முடியாது. நான் பெருமையோடு சொல்கிறேன்... இந்த நான்குக்கும் ஆபத்து வந்த போதெல்லாம், அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற இறையாண்மை; அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற ஜனநாயகம்; அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற மதச்சார்பின்மை; அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற சமதர்மம்; இந்த நான்கும்தான் அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பண்பு.

இந்தப் பண்புக்கு ஊறு நேரிட்ட போதெல்லாம், இந்த நான்கு பண்புகளுக்கும் ஆபத்து வந்த போதெல்லாம், அந்த நான்கு பண்புகளையும் அரசியல் சட்டத்தையும் காப்பாற்றிய இயக்கம் தேசிய இயக்கம் அல்ல, வேறு எந்த மாநிலக் கட்சியும் அல்ல... தி.மு.க., தி.மு.க., தி.மு.க.!

### 1. இறையாண்மை (Sovereignty)

இறையாண்மைக்கு ஆபத்து வந்தது. இப்பொழுதுகூட நாடாளுமன்றத்தில் சொன்னேன், பார்த்திருப்பீர்கள் நீங்கள், வைரல் ஆனது என்றார்கள். பாகிஸ்தான் படையெடுத்து வந்தது, எங்களுக்கு என்ன கவலை? ஒரு காலத்தில், திராவிட நாடு கேட்டோம்; தனித் தமிழ்நாடு கேட்டோம். எங்கேயோ பாகிஸ்தான் படையெடுக்கிறான், எங்களுக்கு என்ன ஆபத்து? பாதிப்பு, காஷ்மீருக்கு இருக்கும்; பக்கத்தில் இருக்கும் உத்தரப் பிரதேசத்திற்கு இருக்கும். தமிழ்நாட்டில் வந்து குண்டு போடுகிறானா? இங்கேதான் முஸ்லிம்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கிறார்களே... பெரியாரால், காயிதே மில்லத்தால். ஆனால், "இந்தியாவினுடைய இறையாண்மை காப்பாற்றப்பட வேண்டும், தேசம் துண்டாடப்படக் கூடாது" என்பதற்காக, ஒரு இன்ச் கூடப் போகக் கூடாது என்பதற்காக, அன்றைக்கு எந்த முதலமைச்சரும் தராத நேரத்தில், 6 கோடி ரூபாயை இந்திரா காந்தியிடம் அள்ளித் தந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர்! இது இறையாண்மைக்கு.

### 2. ஜனநாயகம் (Democracy)

ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்தது, மிசா (MISA) கொண்டு வந்தார்கள். பேச முடியாது; எழுத முடியாது. எல்லாரும் சிறையில் இருந்தார்கள். ஆற்காட்டார் இருந்தார்; முரசொலி மாறன் இருந்தார்; டி.ஆர். பாலு இருந்தார்; (சிவா) இருந்தார்; எங்கள் ஊரில் எல்லாரும் இருந்தார்கள். பேச முடியாது; எழுத முடியாது. போனவர்கள் எப்பொழுது வந்தார்கள் என்று தெரியாது. சிட்டி பாபுவை நாம் பறி கொடுத்தோம். அந்த ஜனநாயகத்தை எதிர்ப்பதற்குக் கம்யூனிஸ்ட்காரர்கள் முன் வந்தார்களா? எந்த மாநிலக் கட்சியாவது முன் வந்ததா? வரவில்லையே! அதை எதிர்த்துத் தீர்மானம் போட்டு, ஆட்சியை எதிர்த்து, ஜனநாயகத்தைக் காப்பாற்றிய இயக்கம் இந்த இயக்கம். அரசியல் சட்டத்தில்.

### 3. மதச்சார்பின்மை (Secularism)

மதச்சார்பின்மைக்கு ஆபத்து வந்தது. எப்பொழுது ஆபத்து வந்தது? "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாபர் மசூதியை இடித்து விட்டு ராமர் கோயில் கட்டுவோம்; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் காஷ்மீருக்கு வழங்கப்பட்டிருக்கிற 370-வது சிறப்புப் பிரிவு, காஷ்மீர்க்காரன் மட்டும்தான் நிலம் வாங்க முடியும்; காஷ்மீருக்கு வேண்டிய சட்டத்தைக் நாடாளுமன்றம் இயற்ற முடியாது, காஷ்மீர் சட்டமன்றமே இயற்றிக்கொள்ளலாம். இதெல்லாம் நேருவால் பாகிஸ்தான் பிடிக்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு உரிமை. அதை இன்றைக்குக் குறை சொல்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதை எடுப்போம் என்றார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இஸ்லாமியர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, இந்துக்களுக்குத் தனித்தனி சட்டம் எல்லாம் ஒன்றாக்குவோம் என்றார்கள்.

இதுதான் பி.ஜே.பி.யின் ஜீவாதாரக் கொள்கை. அதிலே இரண்டை முடித்து விட்டார் மோடி. கோயில் கட்டிவிட்டார், 370-ஐ எடுத்துவிட்டார். சிவில் சட்டம் இன்னும் கொஞ்ச நாளில் வரப்போகிறது. இது தான் மூலாதாரக் கொள்கை, மதச்சார்பின்மைக்கு நேர் எதிரான கொள்கை.

ஆனால் கலைஞர் அன்றைக்கு பிஜேபியோடு கூட்டணி வைத்து, பி.ஜே.பி.யினுடைய மூலாதாரக் கொள்கை எதுவோ, அந்த கொள்கையைக் குறைந்தபட்ச செயல் திட்டத்தால் முடக்கிப் போட்டார். அப்பொழுதெல்லாம் அருள்மொழி என்னிடம் பேசாது; ஆசிரியர் என்னிடம் பேச மாட்டார். திட்டுவார்கள் எங்களை, "எப்படி நீங்கள் பி.ஜே.பி. கூடப் போகலாம்?" என்று. இவர்கள் வேலி கட்டி பி.ஜே.பி.யைக் காப்பாற்ற நினைத்தார்கள்; நாங்கள் கூடப் போய் கையும் காலையும் கட்டி உள்ளே போட்டு அடக்க வேண்டும் என்று நினைத்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த வரை, பாபர் மசூதிக்கு ஆபத்து இல்லை; கலைஞர் அந்தக் கூட்டணியில் இருந்த வரை, 370-க்கு ஆபத்து இல்லை; நாங்கள் அங்கே இருந்தவரை, சிவில் சட்டத்தைப் பற்றிப் பேச முடியாது. மதச்சார்பின்மையைக் கூட்டணி வைத்தும் காப்பாற்றிய இயக்கம் கலைஞரின் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். நாங்கள் வெளியே வந்தோம்; இப்போது எல்லாம் காணாமல் போனது.

### 4. சமதர்மம் (Socialism)

சமதர்மம். மொரார்ஜி தேசாய் நிதி அமைச்சர்; இந்திரா காந்தி பிரதமர். அப்பொழுதுதான் நமக்கு அதிகமாக 184 இடங்கள்... நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MP) 25 பேர்; மீதி காங்கிரஸிற்கு, கூட்டணியில் இருக்கிறோம். இந்திரா காந்தி என்ன கொண்டு வந்தார்கள்?

அப்பொழுது எல்லாம் வங்கிக்குப் போக முடியுமா? என் மகள் இப்பொழுது நெட் பேங்கிங்-இல் (Net banking) இருக்கிறாள். நான் முதன்முதலில் 1989-இல் வழக்கறிஞராகி, என்னை நீதிமன்றத்தில் பார்த்துவிட்டு, கனரா வங்கியில் ஆலோசகராகப் போட்டார்கள். உண்மையைச் சொல்கிறேன், முதன்முதலில் அன்றைக்குத்தான் எனக்குக் காசோலைப் புத்தகமே (Cheque book) கொடுத்தார்கள். "சார், உங்களுக்கு ஊதியம் (Fee) எல்லாம் காசோலையில் தான் சார் வரும்" என்றார்கள். அந்தக் காசோலைப் புத்தகத்தைக் கொண்டு போய் எங்கள் அம்மாவிடம் கொடுத்தேன்; கண்ணில் ஒற்றிக்கொண்டு, அவர்கள் கொண்டு போய் கடவுள் படத்திடம் வைத்தார்கள். "ஏம்மா, அது கனரா வங்கி கொடுத்ததும்மா, கடவுள் என்ன செய்வார்? அங்கே போய் வைக்கிறாய்" என்றேன். காசோலைப் புத்தகமே அப்பொழுதுதான் சார் நான் பார்த்தேன்; காசோலைப் புத்தகத்தைப் பார்த்தது 1989-இல். இப்பொழுது என் மகள் லண்டனில் தொடர்வண்டியில் (Train) ஏறி இறங்குகிறாள், எனக்குத் செல்பேசியில் வருகிறது. பேங்கிங்.

ஆனால் இந்த வங்கி என்ன தெரியுமா செய்தது? நீங்கள் ஒருவரும் அருகில் போக முடியாது. பேருந்து முதலாளி போகலாம்; ஆலை (Mill) முதலாளி போகலாம்; விவசாயத்திற்கு கடன் (Loan) கொடுக்க மாட்டான்; பெரிய பெரிய பணக்காரனுக்குத்தான் கனரா வங்கி உள்ளிட்ட எல்லா வங்கியும்.

"இந்த வங்கிகள் ஏழைகளைப் போய் சேர வேண்டும்" என்று இந்திரா காந்தி கொண்டு வந்தார், "Nationalized Banks – வங்கிகளைத் தேசியமயமாக்குகிறேன்." கோப்பு நிதி அமைச்சருக்குப் போகிறது. நிதி அமைச்சர் மாறுபட்ட குறிப்பை (Dissent note) எழுதுகிறார், "இது தேவையில்லை, இது வங்கிகளைப் பாதிக்கும்." காங்கிரஸ் இரண்டாக உடைகிற மாதிரி ஆகிப்போனது.

ஒரே ஒரு கடிதம்... ஒரே ஒரு கடிதம் இந்திரா காந்திக்கு, "நீங்கள் கொண்டு வருகிற இந்தச் சட்டம் ஏழை எளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, விவசாயிகளுக்கு வங்கிகளைக் கொண்டு போய்ச் சேர்க்கும். வங்கிகளால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 25 பேர் உங்களுக்கு வாக்களிப்பார்கள், அந்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னது கலைஞர், நிறைவேற்ற வைத்தது கலைஞர். சமதர்மம்!

இப்பொழுது சொல்கிறேன், "We, the people of India, having solemnly resolved to constitute India into a Sovereign, Socialist, Secular, Democratic Republic..." இந்த நான்கையும் காப்பாற்றிய இயக்கம், காங்கிரஸ் கூட அல்ல; அன்றைக்கு இருந்த ஜனதா தளம் கூட அல்ல; அன்றைக்கு இருந்த எந்த மாநிலக் கட்சியும் அல்ல; அந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், செய்து காட்டிய மகத்தான தலைவன், இன்றைக்குப் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோமே அந்தக் கலைஞர் என்ற மகத்தான மனிதன்!

### தலைமுறைகள் தாண்டிய சமூக மாற்றம்!

இவ்வளவு பெரிய இயக்கம். இந்த இயக்கத்தை இன்றைக்கு இந்தியா முழுக்க கொண்டு போய் சேர்த்தார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இவருடைய திட்டத்தை எல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அருள்மொழிக்கு ஒரு வருத்தம்; பிரசன்னாவுக்கு ஒரு வருத்தம், கோபம். எங்களுக்கு இருக்கிற வருத்தம், இந்தியாவே தமிழ்நாட்டை உற்றுப் பார்த்ததே, இந்தத் தமிழ்நாடு இப்படி ஆகிவிட்டதே. நாடாளுமன்றத்திற்குப் போனால் நம்மை எப்படிப் பார்ப்பார்கள்?

ஒரு அறிவாளியிடம் தோற்றால் பரவாயில்லை; அரசியல் ஆளுமையிடம் தோற்றால் பரவாயில்லை; ஒரு புத்திசாலியிடம் தோற்றால் பரவாயில்லை; ஒரு கொள்கையாளரிடம் தோற்றால் பரவாயில்லை; உள்ளபடியாக ஒரு மாற்றத்தை விரும்பினால் பரவாயில்லை. நான் எல்லா இடங்களிலேயும் சொல்லுவேன், எங்கள் தாத்தா தீண்டாமைக்காகவும், ஏழ்மைக்காகவும் இலங்கைக்கு ஓடினார். எங்கள் அப்பா ஆங்கிலம் படித்தார்; அங்கிருந்து பொருளீட்டி வந்தார், சொத்து வாங்கினார். நான் எட்டாவது பிள்ளை, எங்கள் வீட்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., நகராட்சி ஆணையர், மருத்துவர், பொறியாளர் எல்லாம் வந்துவிட்டார்கள். எட்டாவது பையனே திராவிட முன்னேற்றத்தால், கலைஞரால், பெரியாரால், அண்ணாவால், அம்பேத்கரால் ஒன்றிய அமைச்சர் ஆகிவிட்டேன்!

என் மகள் லண்டனில் படிக்கிறாள். அவளுக்கு ஜாதி என்றால் என்னவென்று தெரியாது. அவளிடம் போய், நீ SC என்று சொல்லிப் பாருங்கள். உடனே புஸ்ஸி என்று உதைக்கும். தாத்தா ஓடினார்; அப்பா கொஞ்சம் மாற்றம்; ராஜா வந்தார், பெரிய முன்னேற்றம்; ராஜாவுக்குப் பின்னால் புரட்சிகர மாற்றம், என்னுடைய மகள் மயூரி. இந்த மாற்றங்களுக்குப் பின்னால் யார்? இந்த இயக்கம் – பெரியார், அண்ணா, கலைஞர், அம்பேத்கர்!

இப்பொழுது நீங்கள் ஒரு மாற்றம் என்கிறீர்களே, என்ன கிழிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டேன். பேசிப் பேசியே வளர்ந்த தமிழ்நாட்டு அரசியலில், பேசாத ஒரு ஆள் முதலமைச்சர்! அப்படியே பேசினாலும் எங்கே பேச வேண்டுமோ அங்கே பேச மாட்டேங்குறார். வெளியே வந்தால் கை கால் இப்படிப் போகிறது. சட்டசபைக்குப் போனால், என்ன... ஒன்றும் புரியவில்லை. சேகர் பாபு, ஒன்று சொல்கிறேன் தப்பா நினைக்காதே... நீ விபூதி வைத்திருப்பதால் சொல்கிறேன். எங்களுக்கு நம்பிக்கை இல்லை, நீ எல்லாம் ஏதோ பாவம் செய்திருக்கிறாய். இந்தச் சட்டசபையில் சென்று உட்கார்ந்திருக்கிறாய் பார்த்தாயா... அப்படி ஆகிப்போச்சு!

இப்பொழுது ஒன்றும் கெட்டுப் போகவில்லை. அருள்மொழி அழகாகச் சொன்னார்கள்... திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தலைமுறைக்காக மட்டும் சிந்திக்கக்கூடிய இயக்கம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், அவரை மாதிரி போராளி யார் இருக்கிறார்? எத்தனை முறை... ஒன்றுமில்லை, ஐ.பி.கே.எஃப். (IPKF) – இந்திய அமைதிப்படை போனது இலங்கைக்கு; நம்முடைய தமிழர்களைக் கொன்றார்கள். முதலமைச்சராக இருக்கிறார் கலைஞர். ஒன்றிய அரசாங்கம் சொல்லுகிறது, "ஆளுநரை, அந்தந்த மாநில முதலமைச்சர் போய் வரவேற்க வேண்டும்" என்று. "போக முடியாது" என்றார். "ஆட்சியைக் கலைப்போம்" என்றார். "கலை" என்றார். "என் தமிழன் இறந்துவிட்டான்; அவனைப் போய் இந்திய ராணுவம் கொல்லுகிறது; அதற்காக என்னுடைய ஆட்சி போகும் என்றால் போகட்டும்" என்று சொல்ல முடியுமா? சொல்ல முடியாது.

தமிழ்ச்செல்வன்... ஒரு விடுதலைப் புலி. அவர் ஒன்றும் பண்ணவில்லை. தலைமைச் செயலகத்தில் ஒரு பேப்பர் எடுத்துவிட்டாராம்; அது அரசாங்கப் பேப்பராம்; அந்த அரசாங்கப் பேப்பரில் தட்டச்சு செய்துவிட்டாராம். "அந்த இரண்டு பேப்பர்களை அரசாங்கச் செலவில் தட்டச்சு செய்துவிட்டார் முதலமைச்சர்; விடுதலைப் புலிகளுக்காக எப்படி எழுதலாம், ஆட்சியைக் கலைக்க வேண்டும்" என்றார் ஜெயலலிதா. "ஏம்மா, நான் நிறைய எழுதும்போதெல்லாம், நீ அமைதியாக இருந்தாய்; ஒரே ஒரு தாளிற்காகக் கலைக்க வேண்டும் என்கிறாயே, உனக்கு அவ்வளவு விருப்பம் இருந்தால் கலைத்துக்கொள்" என்றார். ஒரு தமிழ்ச்செல்வனுக்காக அல்ல; தமிழ்ச்செல்வனுக்குப் பின்னால் இருக்கிற மிகப்பெரிய தமிழ் சமுதாயம், என் உடலில் ஓடுகின்ற தமிழ் இரத்தத்திற்காகச் சொல்கிறேன், "என் ஆட்சியை கலைத்துக்கொள், கவலை இல்லை" என்று சொன்னவர் அவர்! அவர் எவ்வளவு பெரிய போராளி! வாழ்க்கை, வார்த்தை எல்லாமே.

டெல்லியிலே இருக்கிறார், தமிழ்நாடு இல்லத்தில். பிரபாகரன் இறந்துவிட்டார் என்று காட்டுகிறார்கள் தொலைக்காட்சியில், முகத்தைக் காண்பிக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் பார்க்க வேண்டும் என்று வருகிறார்கள். நாங்கள் எல்லாம் சொல்கிறோம், "தவிர்க்கலாம், இன்னும் உறுதி செய்யப்படவில்லை, அது அவருடைய படம் தானா என்று தெரியவில்லை, நாம் வருத்தமாக இருக்கிறோம்" என்றோம். செய்தியாளர்களைப் பார்த்துவிட்டு இப்பொழுது ஓடுகிறீர்களே, "சிஎம் சார், டெல்லிக்கு எந்த சிஎம் வந்தாலும் பேட்டி கொடுப்பார்கள் சார், மரபு சார், லெகசி (Legacy) சார், தயவுசெய்து சார்" என்றார்கள்.

48 செல்சியஸ் வெயில். இருக்கிற சட்டையைக் அவிழ்த்துப் போட்டுவிட்டு, பனியனோடு இன்றைக்கு போனார்கள் டெல்லியில். அந்த வெயிலில் ஒரு ஆள் கருப்புக் கோட்டைப் போட்டு ஓடுகிறார். மைக்கை நீட்டுகிறார்கள், ஓடுகிறார்.

அவ்வளவு இக்கட்டான சூழல் தமிழ்நாடு இல்லத்தில். கலைஞர் கேட்டார், "பத்திரிகையாளர்கள் நிற்கிறார்கள் அல்லவா... கருணாநிதி பத்திரிகையாளர்களைப் பார்க்காமல் போனார் என்று சொல்லுவார்கள்? அது எனக்கு இழுக்கு, கூப்பிடு" என்றார். பத்திரிகையாளர்கள் வந்தார்கள். "பிரபாகரன் இறந்துவிட்டாரா? நெடுமாறனும், வைகோவும் இல்லை என்று சொல்கிறார்கள். அரசாங்கம் உறுதிப்படுத்தி இருக்கிறது. எது உண்மை? இறந்துவிட்டாரா? இல்லையா?" என்று கேட்டார்கள். ஒரே வரி: "போராளிக்குச் சாவில்லை! கலைஞருக்கும் சாவில்லை!"

### இறுதி உரை: எதிர்காலத்திற்கான உழைப்பு

அதனால் தான் இந்த நாளில் நீங்கள் உணர வேண்டும் என்று நினைக்கிறோம். நான் என்ன கேட்கிறேன்... நான் எவ்வளவோ அரசியல் பார்த்திருக்கிறேன், நீங்களும் பார்த்திருக்கிறீர்கள். ஒரு பொய்யை இவர்களாகக் கட்டமைத்து, அந்தப் பொய்க்கு ஒரு பதில் சொல்லுவார்களா?

இப்போது ஒன்றுமில்லை... "ஏன் நான் கோட்டு போடக்கூடாதா, சூட்டு போடக்கூடாதா?" உன்னை யார் போட வேண்டாம் என்று சொன்னது? அதாவது இவராகவே ஒன்றைக் கற்பனை பண்ணிக்கொண்டு, "நான் கோட்டு போடக்கூடாதா, சூட்டு போடக் கூடாதா?" அதை யார் முதலில் சொன்னது? என்னமோ சூட்டு போட்டதால் நாங்கள் பொறாமையாக இருக்கிற மாதிரியும்...

அதாவது ஒரு குப்பனும் சுப்பனும் படித்து... நான் சூட்டு போட்டால் ஒரு நியாயம் இருக்கிறது. ஏன் என்றால், எங்கள் தாத்தா கோவணம் கட்டியிருந்தார்; எங்கள் அப்பா இலங்கையிலே குளிருக்கு போட்டிருப்பார்.

காந்தி ஏன் கோவணம் கட்டினார், அம்பேத்கர் ஏன் சூட்டு போட்டார் என்று கேட்டார்களாம்? அம்பேத்கர் சொன்னாராம், "இவர் பனியா ஜாதி – யார் காந்தி? பெரிய பணக்காரர். தனவந்தராக இருந்த காந்தி தன்னுடைய எளிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கோவணத்தோடு போவதில் தவறில்லை, அது அவர் அரசியல் ஸ்டைல். கோவணம் கட்டியிருந்த என் சமூகம், கோட் போடுவது என் ஸ்டைல். அதனால் நான் கோட்டுதான் போட வேண்டும்... அவர் கோவணம்தான் கட்ட வேண்டும்" என்றார்.

ராஜா கோட்டு போட்டால் நியாயம் இருக்கிறது. ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில், எங்கேயோ படித்து, பெரியாரால், அண்ணாவால், அம்பேத்கரால் வந்து, நான் கோட்டு போட்டேன் என்பது... நீ நடிப்பதே கோட்டு போட்டுத்தான் நடிக்கிறாய்... சினிமாவிலேயும் கோட்டு போட்டுத்தான் நடிக்கிறாய்; அப்புறம் ஏன் இங்கே வந்து கோட்டு போட வேண்டும். "நான் போடக்கூடாதா?" யார் தம்பி உன்னை போடக்கூடாது என்றது, நன்றாகப் போட்டுக்கொள்ளப்பா, நன்றாகப் போட்டுக்கொள்!

அதில் வேறு, "நான் கருப்பு போட்டிருக்கிறேன் ஏன் தெரியுமா?" இங்கே பார்... இதுவரைக்கும் நீ பேசியது சரி, இந்தக் கருப்புக்குச் சொந்தம் கொண்டாட வந்தால், காளி ஆட்டம் ஆகிவிடுவோம். என்ன விளையாடுகிறாயா? பெரியார் யார் தெரியுமா? இதில் வேறு, கொள்கைத் தலைவர்கள், என்ன கொள்கைத் தலைவர்கள்? முட்டி போட்டு ஒரு இடத்தில் நடப்பது, அதைத்தான் சொன்னேன்.

மதத்தைத் தாண்டியவர்கள் நாங்கள்... மதமா? நெற்றிக்கு ஒரு மதம்; கையில் ஒரு மதம்; சொல்லிக்கொள்ள பெயருக்கு ஒரு மதம்! மதத்தைத் தாண்டி வர வேண்டும் என்றால், எல்லா மதத்தையும் ஒன்றாக உள்ளுக்குள் போட்டால்... இப்படி ஒரு அயோக்கியத்தனம் தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் சொன்னார்கள், "குழந்தை சொன்னதற்கெல்லாம் தாத்தா கேட்பாரா?" என்று. குழந்தை சொல்லி தாத்தா கேட்டுவிட்டார். ஆனால், இனி வருகிற குழந்தைகளாவது அப்படிச் சொல்லாமல் மட்டுமல்ல, எந்தக் குழந்தை இப்படிச் சொன்னதோ, அந்தக் குழந்தையை வருகின்ற குழந்தை திருத்தி, தாத்தாவின் இறுதி நாளில் இன்னொரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, அந்தத் தாத்தா உயிரோடு இருக்கும்போதே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற நாளை எல்லா தலைமுறையும் சேர்ந்து செய்ய வேண்டும்!

அதற்காக உழைப்போம், கலைஞர் புகழ் பாடுவோம்!

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. பேசினார்.